**29. அநசூயை கதை (1)**

அநசூயை என்பவள் அத்திரி முனிவருடைய மனைவி. இவள்அசூயை அற்றவளாக விளங்கியபடியால் அநசூயை என்று பெயர் பெற்றாள். அசூயை-



என்றால் பொறாமை. அநசூயை என்றால் பொறாமை இல்லாதவள். இவள் கற்பு நலத்திலுஞ் சிறந்து விளங்கினாள். கலாம்விளைப்பதில் வல்லுநராகிய நாரதர் இவ்வம்மைக் கும் முத்தேவர்கட்கும் பகையை மூட்டி விட்டார். முத்தேவர்களும் இவளுடைய கற்புநிலையைக் குலைக்க விரும்பி இவளிடம் வந்தனர். இவளோ அவர்களைத்தன்னுடைய கற்பாற்றலால் குழந்தைகளாகச் செய்துவிட்டாள். முத்தேவர்களும் இவளிடமே பால்குடித்துக்கொண்டு இருக்கும்படியாக நேரிட்டுவிட்டது. பிறகு அத்தேவர்களின் மனைவியர் இவளிடம் வந்துதங்கணவரை மீட்டுக்கொண்டு செல்ல நேர்ந்தது. ஒருவர் எவரிடத்தும் பொறாமை கொள்ளுதல் இல்லாத்தன்மை பெற்றால், பெறவேண்டிய சிறந்த பேறுகளுள் அதைப் போன்றது வேறென்றும் இல்லை என்பதும்இவளிடம் நன்கு அமைந்து விளங்கியது.

[கற்பின் சிறப்பு]